29—

ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்

***50311—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், அரியூர்-செங்கரையூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், அரியூர்-செங்கரையூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி ஒன்றியத்தில் அரியூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரித்தால் செங்கரையூர், வடக்குச் செங்கரையூர், மீனவர் காலனி போன்ற பகுதிகள் மேம்பாடு அடையும். இது நீண்ட நாள் கோரிக்கை ஆகும். இது மறுபரிசீலனை செய்யப்படுமா என்று கேட்டுக்கொண்டு, லால்குடியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கி அனுமதி வழங்கியதற்கு, பொற்பாதம் தொட்டு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் புதிய பேருந்து நிலையத்தின் பணி எப்போது முடிவடையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி ஊராட்சி ஒன்றியம், அரியூர் ஊராட்சியில், அரியூர் மற்றும் செங்கரையூர் ஆகிய இரண்டு குக்கிராமங்கள் அடங்கும். அரியூர் குக்கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 1,600. செங்கரையூர் கிராம மக்கள் தொகை சுமார் 1,400 ஆக

2004 நவம்பர் 18]

மொத்தம் அரியூர் ஊராட்சியின் மக்கள் தொகை சுமார் 3,000 மட்டுமே ஆகும். எனவே, அரியூர் ஊராட்சியிலிருந்து செங்கரையூர் ஊராட்சியைப் பிரிப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை. ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலே லால்குடியில் பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணி செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைகள் துவக்கப்பட்டு கட்டடம் கட்டுவது பாதி அளவிற்கு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. மேலும், பணிகள் மீண்டும் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைகள் விரைவாக செயல்படுத்தப்படும். 31-1-2005-க்குள் இப்பணிகள் முழுமையாக முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

30—

விளையாட்டுத் திடல்

*** 35857—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரத்தில் விளையாட்டுத் திடல் அமைத்து, விளையாட்டுச் சாதனங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரத்தில் விளையாட்டுத் திடல் அமைத்து, விளையாட்டுச் சாதனங்கள் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். ரெங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரம் கிராமத்தைச் சுற்றி, தென்பாதி, வடபாதி, காளஹஸ்தினாபுரம், அபிஷேகக்கட்டளை, உமையாள்புரம், சீர்காழி கோவில்பட்டு, முடிகண்டபுரம், அண்ணா நகர் ஆகிய

சிற்றூர்கள் உள்ளன. இவ்வூராட்சியில் சுமார் 500-க்கும் மேற்பட்ட படித்த, படிக்கின்ற இளைஞர்கள் உள்ளனர். இவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காகவும், இவர்களுடைய பொழுதுபோக்கிற்காகவும் விளையாட்டுத் திடல் ஒன்று அமைத்துத்தர வேண்டுமாயும், அவர்களுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வழங்கிட வேண்டுமாயும் கேட்டுக்கொள்வதுடன், இவ்வாண்டு முடியாவிட்டாலும்கூட விளையாட்டுத் துறையை ஊக்குவித்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அடுத்த ஆண்டாவது செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ.வ. வேலு.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையைப் பொறுத்த அளவிற்கு இந்த அரசு ஊக்குவிக்கும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். Youth Affairs என்று மத்திய அரசாங்கத்திலே இருக்கின்ற அமைச்சகத் துறை நம்முடைய தமிழ்நாட்டிலே கட்டப்படுகின்ற அதுவும் குறிப்பாக அறக்கட்டளைகள் மூலமாகக் கட்டப்படுகின்ற உள் விளையாட்டு அரங்கத்திற்கு பாதி அளவிற்கு, அதாவது 50 சதவிகிதம் மானியம் வழங்குகிறார்கள். எனவே, இந்த அரசு இதுபோன்ற உள் கட்டமைப்புக்கு, அதாவது Indoor Stadium கட்டுவதற்கு அரசு மானியம் வழங்குவதற்கு முன் வருமா? அப்படி வழங்கும் என்று சொன்னால், மத்திய அரசாங்கம் 50 சதவீதம் அளவிலே, 1 கோடி ரூபாய் என்று சொன்னால், 50 இலட்சம் ரூபாய் அவர்கள் வழங்குகிறார்கள். எனவே, மாநில அரசு அதிலே தன்னுடைய பங்கை வழங்குமா அல்லது முழுமையாக அந்த நிதியை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் பங்களிப்புத் தொகையாக 25 சதவிகிதமும், தமிழக அரசு சார்பாக 25 சதவிகிதமும், இவை இரண்டும் செலவு செய்யப்பட்ட பின்னரே, மத்திய அரசிடமிருந்து 50 சதவிகிதம் வழங்கப்படுகிறது.